# இன்குலாப் கவிதைகளில் வர்க்கச் சிந்தனைகள்

# Class Ideas in Inquilab Poems

***வெ. ரேவதி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை, இந்தியா

**V. Revathi**
*Ph.D. Research Scholar*
*Centre for Higher Studies in Tamil*
*Senthamil College, Madurai, India*

***முனைவர் அ. நந்தினி***
உதவிப் பேராசிரியர், நெறியாளர்
தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை, இந்தியா

**Dr. A. Nandhini**
*Assistant Professor, Research Supervisor*
*Centre for Higher Studies in Tamil*
*Senthamil College, Madurai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*வர்க்கம் என்ற சிந்தனை முதலாளி, தொழிலாளி என்ற முரண்பாடுகளில் உருவானது. உழைப்பவர்களின் வருமானத்தைத் திருடும் முயற்சியில் இது உருவாக்கம் பெறுகின்றது. இதிலும் இது வளர்ச்சிக்கானது என்று நியாயப்படுத்து வோரும், உழைப்பைச் சுரண்டியே உரிமையாளர்கள் கொழுக்கின்றார்கள் என்ற இருவேறு சிந்தனைகள் உண்டு. இந்த வர்க்கச் சிந்தனைகளை உள்ளடக்கி கவிஞர் இன்குலாப் கவிதைகளில் வெளிப்படும் வர்க்கம்பற்றியகருத்துக்களைவெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது*

***ஆய்வு நோக்கம்:***
*வர்க்கம், தொழிலாளர், முரண், போராட்டம், முதலாளித்துவம், உழைப்பாளர், போராளிகள், சுரண்டல், விடுதலை*

## Abstract

*The idea of class arose out of the contradictions of capitalist and worker. It is created in an attempt to steal the income of those who work. There are two different ideas in this, one is the development process and other is that the proprietors are fattened by the exploitation of labour. This essay incorporates these class ideas and brings out the ideas about class expressed in the poems of the poet Inquilab.*

***Keywords:***
*Class, Labor, Conflict, Struggle, Capitalism, Labor, Militants, Exploitation, Liberation.*

**Citation**

Revathi, V. and A. Nandhini "Class Ideas in Inquilab Poems." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 14–20.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095163*

**முன்னுரை**

*"ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னும் ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது" என்பார் மாவோ. இக்கூற்றை மனித இயங்கியலுக்கான விதி (இலக்கணம்) எனலாம். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"[1] என்பார் தொல்காப்பியர். இதனை இலக்கிய இயங்கியல் குறித்த இலக்கணம் (விதி) எனலாம். பிந்தைய கூற்று இலக்கியத்தின் கலை (அழகியல்) தன்மையினைப் புலப்படுத்துகிறது எனில் முந்தைய கூற்று இலக்கியத்தின் அரசியல் (வர்க்க) பின்புலத்தைத் துலங்க வைக்கிறது. ஒரு சொல் சொல்லப்படுபவனின் பின்புலத்திலிருந்து அச்சொல் யாருக்கான பொருளைத் தருகிறது (உணர்த்துகிறது) என்பதன் பயன் அடங்கியுள்ளது. அந்த வகையில் இலக்கியப் படைப்புகளை வர்க்க அடிப்படையில் அணுகுவதற்கான வழிமுறைகளை "உலக வரலாற்றில் முதன்முறையாக" மார்க்சியம் வழங்கியது. அடித்தள மக்கள் ஆய்வுகள் மார்க்சியத்தை விமர்சித்த போதும் கூட, இவ்ஆய்வுகள் மார்க்சியம் என்கிற அடித்தளத்திலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டவை என "கிராம்சியை" மையப்படுத்தி விளக்கப்பட்டுள்ளது. மார்க்சியம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் விடுதலைக்கான நடைமுறைத் தத்துவம்.*

*அடித்தள மக்களின் குரலாக வெளிப்படும் தீவிர மார்க்சியரான இன்குலாப்பின் கவிதைகள் ஒடுக்கும் வர்க்கங்களின் ஒடுக்குமுறைகளைத் தோலுரித்துக் காட்டுகின்றன. ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் நம்பிக்கை ஒளியினைப் பாய்ச்சுகின்றன. அவ்வகையில் இன்குலாப் கவிதைகளில் வெளிப்படும் வர்க்கச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**வர்க்கத் தோற்றம்**

*வர்க்கம் என்ற சொல் "*classis *என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து இருந்து தோன்றி இருக்கிறது.* classis *என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்துள்ள* classis *என்ற சொல்லுக்கு அந்தக் காலத்தில் ஆயுதம் ஏந்துவதற்காக அமைக்கப்பட்ட குழு அல்லது மக்கள் பிரிவு என்று பொருள். பின்னர் ஊடயளள என்ற வார்த்தை மனித சமுதாயம் பெரிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்களைக் குறிப்பதற்குப் பயன்பட்டது"[2] அது இப்போது பாகுபாட்டினைக் குறிக்கும் ஒரு சொல்லாக நடைமுறையில் உள்ளது. இதனை பொதுவுடமை பேசுவோர்*

**வர்க்க முரணும் வர்க்கப் போராட்டமும்**

*பகை முரண் கொண்ட இரண்டு வர்க்கங்களில் ஒன்று ஒடுக்கும் வர்க்கமாகவும் மற்றொன்று ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் வர்க்கமாகவும் இருக்கும். அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடத்தும் வர்க்கமாக இருக்கும். இவ்வடிப்படையில் இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம், வர்க்கப் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடத்தும் வர்க்கமாகத் திகழ்கிறது. "வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள சமுதாயத்தில், அதிலும் முதலாளிகள் - கூலி உழைப்பாளிகள் என்ற இரு அடிப்படை வர்க்கங்கள் உள்ள சமுதாயத்தில் ஒரு வர்க்கம் தனது நலன்களைப் பெற வேண்டுமானால், மற்றொரு வர்க்கத்திடமிருந்து அவற்றை - வலுக்கட்டாயமாகவும் வன்முறை கொண்டும் தட்டிப் பறிக்க வேண்டிய சூழ்நிலைமையில் இரு வர்க்கங்களின் நலன்களும் ஒன்றுக்கொன்று பகைமைத் தன்மை கொண்டதாகவே இருக்க முடியும்"[3] இவ்வாறு சமூக அமைப்பில் நிலவும் வர்க்க முரண்பாட்டையும், அதன் விளைவாக முகிழ்த்தெழும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தையும் குறித்த பதிவுகளை இன்குலாப் கவிதைகளில் காணமுடிகிறது.*

***"துப்பாக்கிக்குப் பதிலாக***
***துப்பாக்கியா எடுத்தாய்?***
***தடியடி தர்பாரை***
***தகர்த்து நொறுக்க***
***வெடி குண்டுகளையா***
***வீச முயன்றாய்?***
***அடித்தார்***
***அடிபட்டாய்...***
***சுட்டார்***
***சவமானாய்"*** ***(ஒவ்வொரு, ப.104)***

*என்கிற கவிஞரின் வரிகள் வர்க்க முரணைப் பதிவு செய்கிறது. பகை முரண் கொண்ட இரு வர்க்கங்களுமே "ஆயுதங்களை" ஏந்துகின்றன. ஒடுக்கும் வர்க்கத்தால் ஏந்தப்படும் ஆயுதம் சட்டப்புர்வமான உரிமையாக வழங்கப்படுகிறது. ஒடுக்கப்படும் வர்க்கத்தால் ஏந்தப்படும் ஆயுதம் மீறல், வன்முறை, குற்றம் என்று சுட்டப்பட்டு அடக்கி ஒடுக்கப்படுகிறது. முதலாளித்துவச் சமுதாயத்தில் நிலவும் இத்தன்மை வாய்ந்த பகை முரணையும் அதன் விளைவுகளையும் கவிஞரின் இக் கவிதை வரிகள் பதிவு செய்கின்றன.*

*சமகால முதலாளித்துவச் சமூகம் ஜனநாயக உரிமைகளை வழங்கியிருக்கிறது. பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துச் சுதந்திரம் என எத்தனையோ உரிமைகள் அடிப்படையானதாகவும், அத்யாவசியமானதாகவும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய உரிமைகளைக் கண்டு பாட்டாளி வர்க்கம் மயங்கிவிடக் கூடாது என தமது "புரிந்து கொள்ளுங்கள்" எனும் கவிதையில் பாட்டாளி வர்க்கத்திற்கு விழிப்புணர்வுட்டுகிறார் கவிஞர். இந்த வர்க்கப் பிரிவினை குறித்து லெனின்,*

*"வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூக பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும், உழைப்பின் சமூக ஒருங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிணாமங்களாலும் இந்தப்பங்கை சுவீகரித்துக் கொள்ளும் முறையாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் தொகுதியாகும்"[4] என்கிறார். இதனை உள்வாங்கிக்கொண்ட கவிஞரின் கருத்துக்களும் கீழ்க்கண்டவாறு வெளிப்படுகிறது.*

***"புரிந்து கொள்ளுங்கள் - எதிரியைப்***
***புரிந்து கொள்ளுங்கள்***
***சூரியனை அப்பிய முகங்களுக்குள்ளே***
***சூனிய இருள்கள் புதைந்து கிடக்கும்***
***உதட்டில் நெளியும் சாத்வீக மந்திரம்***
***உள்ளத்தில் ஆயிரம் ஓநாயின் ஊளை***
***அகிம்சை உறைக்குள் ரத்தவாடை***
***அமைதி வனத்தில் நச்சுப் புக்கள்***
***தருமச் சக்கரம் நகரும் தடங்களில்***
***புதையும் மானுட உயிரின் ஓலம்***
***இதனது முகத்தை எவர் கிழிப்பார்கள்***
***இதனது தோலை எவர் உரிப்பார்கள்***

***இந்த எதிரியைப் புரிந்தவர் எவரோ***
***இந்த வரலாற்றைப் படைப்பவர் அவரே!" (ஒவ்வொரு, ப.348)***

*முதலாளித்துவச் சமுதாயத்தில் "உரிமைகள்" என்பவை சொல்லளவில் மட்டும்தான். முதலாளித்துவம் வழங்கியுள்ள உரிமைகளுக்குப் பின்னால் முதலாளித்துவ வர்க்க நலன்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. அது உதிர்க்கும் "அகிம்சை" எனும் சொல்லுக்குள் "லாபவெறி" எனும் ஓநாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருக்கின்றன. பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தின் இத்தகைய மாயைகளைத் தோலுரித்துத் தமது வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்கிற வர்க்கப் புரிதலை இக்கவிதை ஏற்படுத்துகிறது.*

*பகைமுரண் கொண்ட இந்த முதலாளித்துவச் சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம்தான் இயல்பு என்கிறது மார்க்சியம். அந்த வர்க்கப் போராட்டத்தை பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்று வழிநடத்தும் எனவும் குறிப்பிடுகிறது.*

***"இன்று கிழக்கு***
***இயற்கையாய்ச் சிவக்கும்***
***திரைப்படச் சுவரொட்டிகளை***
***அரைகுறையாகவோ***
***முழுமையாகவோ***
***மூடும்***
***மே தினச் சுவரொட்டிகள்.***
***மாபெரும் ஊர்வல அறிவிப்புகள்.***
***ஊர்வல அறிவிப்புகள்***
***அனுமதி பெற்று***
***அனுமதி பெற்றுக்***
***கால்கள் நமது***
***தெருவை அளக்கலாம்.***
***காற்றும் முழக்கத்தால்***
***கனத்துத் திரியலாம்.***
***பழகிப்போன வார்த்தைகள்***
***படங்காட்டிக் கொண்டிருக்கும்***
***சிகாகோ நகரத்***
***தெருக்கள் சிவந்ததை***
***சட்டமும் ஒழுங்கும்***
***கெட்டுப் போகாததால்***
***எனது தெருக்களில்***
***சாக்கடை தேங்கும்.***
***இன்றும் கிழக்கு***
***இயற்கையாய்ச் சிவக்கும்***
***மூச்சு விடுகிறேன் என்பதைத் தவிர***
***இன்று குறிக்க ஏதுமில்லை" (ஒவ்வொரு, ப.186)***

*என "மே 1 - உழைப்பாளர் தினத்தை" பாடுகிறார் கவிஞர். முதலாளித்துவச் சமுதாயத்தில் எண்ணற்ற பாட்டாளிகளின் உயிர்த் தியாகத்தால் சாதிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் முதல் வர்க்கப் போராட்டத்தின் சாதனை "உழைப்பாளர் தினம்" ஆகும். அன்றைய தினத்தை*

*முதலாளித்துவம் விடுமுறைச் சலுகையாக மடைமாற்றம் பார்த்தது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் விதியே தமது வர்க்கப் போராட்டத்திற்கான வேலைத் திட்டமாக வரித்துக் கொண்டது. எனினும் ''மே 1'' எனும் நாள் வெறும் சடங்காக மாறிக் கொண்டிருக்கிறது என்கிற வேதனை கவிஞரின் இக்கவிதையில் புலப்படுகிறது.*

*முதலாளித்துவம் பெரும் அதிகாரக் கோட்டையாக பயங்காட்டினாலும் அதன் அடித்தளமாகவும், செங்கற்களாகவும், அரணாகவும் இருப்பவர்கள் உழைக்கும் மக்கள்தான். அவர் தம் உழைப்பினால்தான் முதலாளித்துவம் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் முதலாளித்துவச் சமுதாயத்தின் இளைப்பாறுதலுக்காக உழைக்கும் மக்கள் மூச்சுத் திணறலில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.*

***"சுளைத் திருட்டை அறியாது***
***தோளையே பார்த்து***
***இலவு காத்த கிளிகளாய்***
***மக்கள் இருந்தனர்***
***காத்திருப்பவர்கள்***
***ஏமாறுவார்கள்***
***காக்க வைப்பவர்கள்***
***ஏமாற்றுவார்கள்.***
***உழைக்கும் கைகளைக்***
***கவட்டில் வைக்காதே!***
***பாறையை***
***ஊற்றுத் தண்ணீர்***
***பிளக்கும்***
***மரத்தில்***
***நெருப்பு விழிக்கும்***
***எல்லாம் போராடும்***
***நீயும் போராடு"*** ***(ஒவ்வொரு, ப.185)***

*எனத் தன்னிலை உணராமல் மறந்து கிடக்கும் உழைக்கும் வர்க்கத்தின் இயல்பைப் பாடும் கவிஞர் உழைக்கும் வர்க்கத்திற்கு அதன் தன்னிலையை உணர்த்துகிறார். அதற்கு வர்க்க உணர்வுட்டி வர்க்கப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுக்கிறார்.*

***"... .... .... .... ... ...***
***பறிக்கப்பட்ட***
***மனித விடுதலையை***
***பற்றத் துணிந்த***
***கரங்கள் எல்லாம்***
***மறிக்கும் தடிகளை***
***நொறுக்கித் தள்ளி***
***குறுக்கிடும் துப்பாக்கியைப்***
***பறிமுதல் செய்து***
***உங்களோடு***
***கைகுலுக்குகின்றன"*** ***(ஒவ்வொரு, ப.284)***

*என ''ஒன்றுபடுவோம் போராடுவதற்கு'' எனும் கவிதையில் பாட்டாளி வர்க்கத்திற்கு*

*எழுச்சியுட்டி, அவ்வர்க்கத்தினைப் போர்க்குணப்படுத்திய மார்க்ஸ் குறித்துப் பதிவு செய்கிறார் கவிஞர். வர்க்கப் போராட்டம் என்பது இயல்புதான். எனினும் அதனை வரையறுத்து நெறிப்படுத்தி பாட்டாளி வர்க்கத்தினை ஒருங்கிணைத்த மாபெரும் சாதனையினை ''பாட்டாளி வர்க்கப் போராளிகள்'' செய்து காட்டினர். மார்க்சிய மூலவர்கள் தொடங்கி மாவோ வரையிலும், அவருக்குப் பிறகும் என வர்க்கப் போராளிகளின் மகத்தான சாதனைகளைப் பட்டியலிடலாம்.*

***''உனது வரலாற்றுத் தடயங்களாக***
***எண்பது கோடி முகங்கள் எழுகின்றன.***
***இன்று புகைகிற கொரில்லாத் துப்பாக்கிகள்***
***உனது சிந்தனைத் தோட்டாவை உமிழ்கின்றன.***
***இங்கே உனது சிந்தனை இசைத்த***
***வசந்தத்தின் இடிமுழக்கத்தால்***
***திரிபுவாதத் தூக்கம் கலைகிறது''*** ***(ஒவ்வொரு., ப.262)***

*என வர்க்கப் போராட்ட வரலாற்றில் மாவோவின் பாத்திரம் குறித்துப் பதிவு செய்கிறார் கவிஞர். அபினில் மயங்கிக் கிடந்த அதிகார சீனத்தை மக்கள் சீனமாக வென்று காட்டியவர் மக்கள் தலைவர் மாவோ என்பது குறிப்பிடத்தக்கது.*

*தமிழ்நாட்டின் வர்க்கப் போராட்ட வரலாறு எழுதப்படும்போது அதன் முதல் நட்சத்திரமாய் தோழர் அப்பு ஒளிர்வார். சீனத்தைத் தொடர்ந்து இந்தியாவில் ஏற்பட்ட வர்க்கப் புரட்சி ''நக்சல்பாரிப் புரட்சி'' (1967) என்று அழைக்கப்படுகிறது. மேற்கு வங்கத்தில் உள்ள டார்ஜிலிங் மாவட்டத்தின் நக்சல்பாரி எனும் சிறு கிராமத்தில் ஏற்பட்ட இப்புரட்சியின் தாக்கம் இந்தியாவெங்கும் எதிரொலித்தது. தமிழ்நாட்டில் இப்புரட்சியின் முதல் முகம் ''தோழர் அப்பு'' ஆவார்.*

***''உழவனின் கண்களில்***
***எரியும் கொழுந்துகளில்***
***தொழிலாளர் நெஞ்சின்***
***போராட்ட உணர்வுகளில்***
***திரிபுவாதச் சாக்கடையில்***
***சமரசக் குளியலை எதிர்த்துப் போராடி,***
***இரத்தக் குளியல் நடத்தும்***
***புரட்சிச் சிந்தனையில்***
***சாவு மூளையிலும்***
***முறுவலிக்கும் உதடுகளில்***
***அந்த***
***இரத்த சாட்சியங்களில்***
***உரத்த குரல்களில்***
***அப்புவின் தோழர்கள்***
***அணி திரள்கிறார்கள்.***
***எரியும் ஒவ்வொரு***
***செந்தளந் தோறும்***
***அப்பு என்ற***
***மாவீரன் சுடர்வான்!***
***முழு விடுதலையின்***

*செங்கொடி விரிகையில்*
*தோழன் அப்பு*
*ஜீவனாய்த் துடிப்பான்!'' (ஒவ்வொரு, ப.268)*

*என்று தமிழ்நாட்டு உழவர் புரட்சிக்கு வித்திட்ட தோழர் அப்புவின் வர்க்கப் பாத்திரம் மற்றும் அவர்தம் வர்க்கப் போராட்டம் குறித்து கவிஞர் இன்குலாப் தமது கவிதைகளில் பதிவு செய்கிறார். இவ்வாறாக பாட்டாளி வர்க்க விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த வர்க்கப் போராளிகள் மார்க்ஸ், மாவோ, அப்பு முதலியவர்கள் குறித்த பதிவுகள் இன்குலாப் கவிதைகளில் இடம்பெறுகின்றன.*

**முடிவுரை**

- *பொதுவுடைமைச் சிந்தனைகள் உருவானதற்குப் பிறகு முதலாளிகள், தொழிலாளிகள் என்பவர்களை அடையாளப்படுத்த வர்க்கம் என்ற சொல் உருவாக்கப்பட்டது.*
- *தொழிலாளர் உழைப்பை உறிஞ்சிக் கொழுப்பதையே உலகம் முழுமையும் உள்ள முதலாளித்துவம் செய்து வருகிறது.*
- *பல்வேறு நாடுகளில் நடைபெற்ற ஒன்றுபட்ட போராட்டத்தின் விளைவாக, தொழிலாளிகளின் நலன் காக்கப்பட்டுள்ளது.*
- *இன்குலாப் கவிதைகள் முதலாளித்துவம், அடக்குமுறை, போராட்டம், ஒன்றுபடுதல், அமைப்பாகத் திரளுதல் போன்ற வர்க்கம் சார்ந்த சிந்தனைகளை வலியுறுத்துவதை அறியமுடிகிறது.*

**குறிப்புகள்**

1. *இளம்புரணர்(உ.ஆ), தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூ.எ.157.*
2. *நியுசெஞ்சுரி ஆசிரியர் குழு,வர்க்கங்களும் வர்க்க உறவுகளும், ப.5.*
3. *எஸ்.வி.ராஜதுரை, அந்நியமாதல், ப.193.*
4. *வி.இ.லெனின், மாபெரும் தொடக்கம் நூல் திரட்டு,பாகம்-3, ப.291.*

**துணைநின்ற நூல்கள்**


1. *இளம்புரணர்(உ.ஆ), தொல்காப்பியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1993.*
2. *நியுசெஞ்சுரி ஆசிரியர் குழு, வர்க்கங்களும் வர்க்க உறவுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், அம்பத்தூர், சென்னை - 600 092. 2012.*
3. *ராஜதுரை.எஸ்.வி., அந்நியமாதல், க்ரியா பதிப்பகம், சென்னை - 600 041, இரண்டாம் பதிப்பு-ஆகஸ்ட்-2022.*
4. *லெனின். வி.இ., மாபெரும் தொடக்கம், நூல் திரட்டு, பாகம்-3, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977.*


## References


1. Ilampooranar, Tholkappiyam, Meiyappan Publications, Chidambaram, 1993.
2. New Century Editorial Board, Vargangalum Varga Uravugalum, New Century Book House (P) Ltd., Ambattur, Chennai - 600 092. 2012.
3. Rajadurai.S.V., Anniyamathal, Kriya Publications, Chennai - 600 041, Second Edition-August-2022.
4. Lenin.V.E., Maperum Thodakam, Collected Works, Vol. 3, Progress Press, Moscow, 1977.